**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**C.C. No. 68/2021.**

**வழக்கு சாட்சி – அ.சா. 7 (பட்டியல் சாட்சி – 12).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. இளங்கோவன். | ஜாதி | |
| தந்தை பெயர் | சுருளிவேல். | தொழில் | சிறப்பு சார்பு ஆய்வாளர். |
| கிராமம் | வடுகபட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 55/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.08.2026.

**(எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 B.N.S.S. –இன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, ஜெயமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்புக் காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்துவருகிறேன். கடந்த 03.02.2021 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு அல்லிநகரம் காவல் நிலையத்தில் சிறப்புக் காவல் உதவி ஆய்வாளராகப் பொறுப்பில் இருந்தபோது, சிவக்குமார், த/பெ. சந்தானம், ரத்தினம் நகர் என்பவர் கொடுத்த புகாரைப் பெற்று, நிலையக் குற்ற எண். 77/2021, சட்டப் பிரிவு 304(A) இ.த.ச.–வாக வழக்குப் பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. வாதியுன் புகாரை இணைத்து, முதல் தகவல் அறிக்கையுடன் கனம் தேனி நீதித்துறை நடுவர் அவர்களுக்கும், அதன் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன். அதன் மற்றொரு நகல் ஒன்றை காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

புகார்தாரர், புகாரை எழுதிக் கொண்டுவந்தாரா? அல்லது காவல் நிலையத்தில் வைத்து எழுதினாரா? என்றால், எழுதிக் கொண்டு வந்தார். புகாரை யார் எழுதினார் என்ற விவரம் சொல்லவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு

முன்பாக சாட்சிகள் யாரையும் விசாரித்தேனா? என்றால், இல்லை. புகாரில், எதிரியின் தகப்பனார் பெயர் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளதா? என்றால், பூங்கொடியான் மகன் பிரபாகரன் என சொல்லப்பட்டுள்ளது. புகார்தாரருக்கு எதிரியின் விவரம் எவ்வாறு தெரிந்துகொண்டது என நான் விசாரித்தேனா? என்றால், இல்லை. அ.சா.1 புகார் கொடுக்க வந்தசமயத்தில், காவல் ஆய்வாளர் நிலையப் பொறுப்பில் இருந்தாரா? என்றால், இருந்தார். நான், அ.சா.1–இன் கையொப்பத்தை முதல் தகவல் அறிக்கையில் பெறவில்லை என்றால், சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் விசாரணை செய்யவில்லை என்றாலும், காவல் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.08.03 18:18:21 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**